**தலைப்பு 291 – கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம்**

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 யூன் 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜீலை 17 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து 2019 டிசம்பர் 03 ஆம் திகதியிட்ட பொது கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 271/2019 ஏற்பாட்டிற்கு அமைய, நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக

ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

--------------------------------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும்

தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் பிரிவு 38 இன் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

-----------------------------------------------------------

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

-----------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 31 டிசம்பர் 2018 இல் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் படி நிதியல்லா சொத்துக்களின் மொத்த மீதி ரூபா 387,973,060 ஆகும்.ஆனால் மதிப்பாய்வாண்டில் ஆரம்பத்தில் நிதியல்லா சொத்துக்களின் மீதி ரூபா 402,290,861 ஆக காணப்பட்டது.ஆகையால், ரூபா 14,317,801 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | சொத்தின் ஆரம்ப மீதி மற்றும் சொத்தின் பெறுமதி சரியாக பதிவு செய்யப்பட வேண்டும். | நிதியல்லா சொத்துகளின் ஆரம்ப மீதியுடன் 31.12.2018 திகதியில் உள்ள மீதி வேறுபாட்டிற்கு 2019 ஆம் ஆண்டு சிகாஸ் நிகழ்ச்சியால் பெறப்பட்ட இரண்டு காரணங்கள் உள்ளன.<br>அ.31.12.2018 திகதியில் அலுவலக கட்டிடத்தில் குறைவேலை(டபில்யுஜபி) ரூபா 22,511,634 ஆக காணப்பட்டதோடு 2019 ஆம் ஆண்டிற்கான கட்டிடம் தொடர்பான செலவு ரூபா 37,371,226 மற்றும் மொத்த செலவு ரூபா 59,822,865 ஆகும்.31.12.2019 இல் கட்டிட சொத்தில் தொகையானது குறைவேலையால் மாற்றமடைந்தது.ஆகையால், 59,882,865 தொகையான கட்டிமானது அலுவலக கட்டிடத்தின் கீழ் காட்டப்பட்டதால் 31.12.2019 இல் சிகாஸ் |

| | | |
|---|---|---|
| | | திட்டத்தால் நிதியல்லா சொத்தாக காட்டப்பட்டது.<br><br>ஆ.திணைக்களத்திற்கு சொந்தமான பிராந்திய அலுவலகங்களில் ஒவ்வொரு சொத்தும் 2019 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்டது மற்றும் ரூபா 5000 ற்கு மேற்பட்ட ஒவ்வொரு மீதியுமாக மொத்தம் ரூபா 36,839,440 நிதியல்லா சொத்துக்களின் ஆரம்ப மீதியாக காட்டப்பட்டது.ஆகையால், ரூபா 22,551,639 மற்றும் 36,289,470 இனை சரி செய்து ரூபா 14,317,801 மீதி பெறப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

-----------------------

### 2.1 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்தல்

-----------------------------------------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| பிறவுன்ஸ் அன்ட் கம்பனி தொடர்பாக மதிப்பாண்டில் ரூபா 329,590 பொறுப்புகளாக 291-1-1-0-2003 இன் கீழ் மூலதன பொருளாக அடையாளம் காணப்பட்டது மற்றும் | பொறுப்புகளுடன் தொடர்புடைய செலவுகளானவை அதற்கு சமமான செலவின் கீழ் | 2019 ஆம் ஆண்டில் மீதமுள்ள ஏற்பாட்டின் படி பிறவுன்ஸ் அன்ட் கம்பனி உள்ளடங்களாக 5 நிறுவனங்கள் ரூபா |

| | | |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டில் 291-1-1-0-1409 (பிற) மீண்டெழும் பொருளாக 66/69 நிதி ஒழுங்கு விதிமுறையின் கீழ் செலுத்துவதற்கு செலவுகளிற்கு இடையில் ஏற்பாட்டிற்கு அனுமதிக்கப்படவில்லை.மேலும்,291-1-1-0-2003 மூலதன செலவின் கீழ் ரூபா 220,016 மொத்த பொறுப்பாக சிம்பிள் இன்ஜினியரிங்(தனியார்) நிறுவனத்திற்கு அங்கிகரிக்கப்பட்டது மற்றும் அதற்காக ரூபா 265,800 செலுத்தப்பட்டது.இதன்படி,ரூபா 45,784 பொறுப்பாக அடையாளம் காணப்படாமல் செலுத்தப்பட்டது. | செலுத்தப்பட வேண்டும் மற்றும் வேறு செலவின் கீழ் செலுத்தப்படும் போது நிதி ஒழுங்கு விதிகள் 66/69 ஏற்பாட்டின் கீழ் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 921,330 இனை செலுத்த வேண்டும்.ஆனால் 2019 ஆம் ஆண்டிற்கான தேவையான முற்பணம் பெறப்படவில்லை.2020 ஜனவரி மாதத்தில் இருந்து 291-1-1-0-2003 செலவின் கீழ் ரூபா 500,000 மாத்திரம் பெறப்பட்டது.புதிய சேவையை பெறுவதற்கு 291-1-1-0-1409 செலவின் கீழ் பழைய மீதியை பிறவுன்ஸ் அன்ட் கம்பனிக்கு செலுத்த வேண்டும். |

## 2.2 முற்பணங்களை தீர்த்தல் மற்றும் வழங்குதல்

----------------------------------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| நிதிஒழுங்கு விதிகள் 371(2)(ஆ) மற்றும் 14 ஜீலை 2015 திகதியிடப்பட்ட பொது நிதி சுற்றறிக்கை இலக்கம் 03/2015 இன் நிதிஒழுங்கு விதிகள் 371(5) இன்படி வேலை நிறைவடைந்தது.10 நாட்களிற்குள் துணை முற்பணத்தினை பெற்றவர் அதனை முற்பண கணக்கு துறைக்கு கட்டாயம் செலுத்த வேண்டும்.எனினும் 24 காரணங்களினால் மொத்தமாக | குறிப்பிட்ட வேலை முடிவடைந்ததும் சுற்றறிக்கையின் படி முற்பணத்தை செத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். | தேசிய நிகழ்ச்சிகள்,விசேட நிகழ்ச்சிகள் மற்றும் முன் மொழியப்பட்ட நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக்குவதற்கு குறிக்கப்பட்ட காலத்திற்குள் அமுல்படுத்தப்பட்டு முடிவடைய வேண்டும்.வேலையை முடிப்பதற்கு முற்பணம் தேவைப்படும் போது நிறைவேற்று அதிகாரமற்ற |

| | | |
|---|---|---|
| ரூபா 883,540 முடிவடையும் காலத்திற்குள் செலுத்தப்படவில்லை.அந்த முற்பணங்கள் தாமதமாக 13 நாட்களிற்கு மற்றும் 05 மாதம் 20 நாட்களிற்கு இடையிலே செலுத்தப்பட்டது. | | உத்தியோகத்தரால் அவர்களின் சொந்த பெயரில் பெறமுடியாததால், குறிப்பிட்ட முற்பணம் நிறைவேற்று அதிகாரம் உள்ள அதிகாரியின் பெயரில் பெறப்பட்டது.ஆகையால் ஒரு உத்தியோகத்தர் பல முற்பணங்களுடன் வேலையை முடிக்க வேண்டியதால் தாமதத்துடன் முற்பணங்கள் செலுத்தப்பட காரணமாகின்றது மற்றும் எதிர்காலத்தில் இந்த நிலைமையை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

-----------------------------------

**3.1 திட்டமிடல்**

-----------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| கொக்ககல கடற்கரை பூங்காவிற்கான ஆரம்ப திட்டத்தில் ரூபா 16,191,911 செலவில் கட்டப்பட்டது.ஆனால் ஆனால் ரூபா 17,451,352 முறையான திட்டமிடல் இன்றி | திட்டத்தினை தொடங்கும் முன்பு திட்டமானது சரியாக திட்டமிட வேண்டும் மற்றும் சிறிய மாற்றங்கள் | கடற்கரை பூங்காவின் தள அமைப்பில் முற்றாக மாற்றமில்லை மற்றும் முதல் நோக்கம் / எல்லையில் |

| | | |
|---|---|---|
| மதிப்பிடப்பட்டது.மற்றும் நடைபாதையின் உள்ளடக்கம் மற்றும் சிற்றுண்டிசாலை நீக்கப்பட்டமை மற்றும் மதிப்பிடப்பட்ட 06 அளவுள்ள தொகுதியை 02 ஆக குறைக்கப்பட்டமை மற்றும் வடிகால் அமைப்பு உள்ளடங்களாக கேபியன் சுவர் மற்றும் கிணறு கட்டமைப்பின் மூலம் ஆரம்ப திட்டத்தினை மாற்றியமைத்தனர்.மேலும் ஒப்பந்ததாரருடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் கீழ் ஒப்பந்த தொகை,முடிவடையும் திகதி,செயலாற்று முறி மற்றும் பிந்திய கட்டணம் தொடர்பாக எந்த தகவலும் உள்ளடக்கப்படவில்லை. | பிரச்சனைக்குரியவை அல்ல ஆனால், பெரிய மாற்றங்களை திட்டத்தை அமுல்படுத்தும் போது திட்டமானது அதன் அடைய வேண்டிய திட்டத்தின் நோக்கத்தினை ஆழமாக கவனிக்க வேண்டும். | மாற்றமில்லை.ஆனால்,பெறுகைகள் நிறுவனத்தினால் உள்ளடக்கத்தினை மாற்றி கொள்ளாமல் உட்கட்டுமான பொருள் மற்றும் வேலைப் பொருளில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. |

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| (அ)திணைக்களத்தினால் அங்கிகரிக்கப்படாத நிர்மாணங்கள் தடுக்க வேண்டிய போதிலும், 2015 இல் இருந்து 2019 வரை மொத்தமாக 1344 அங்கிகரிக்கப்படாத | கரையோரம் பேணல் சட்ட ஏற்பாடு அங்கிகரிக்கப்படாத நிர்மாணங்கள் தொடர்பாக இணங்க வேண்டும் மற்றும் அவற்றை | அங்கிகரிக்கப்படாத நிர்மாணங்களை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.மற்றும் காலி,மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை |

| | | |
|---|---|---|
| நிர்மாணங்கள் காணப்பட்டன.அதிகளவான அங்கிகரிக்கப்படாத நிர்மாணங்கள் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் பதிவாகின. 1163 நிர்மாணங்களை உடைத்து அகற்றுவதற்காக கட்டளைகள் பெறப்பட்ட போதிலும்,214 மட்டுமே உடைத்து அகற்றப்பட்டன. அது உடைந்து அகற்றப்பட வேண்டிய அளவில் 18 சதவீதமான அளவாக இருந்தது. | தகர்த்துவதற்கு கட்டளை இட வேண்டும்.ஆனால் காரணங்களின் அடிப்படையில் அகற்றுவதற்கு என தனியாக பிரிக்கப்பட வேண்டும்.மற்றும் தகுந்த நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும். | மாவட்டங்களில் புதிய நிர்மாணத்திற்கு தடை விதிக்கப்படும்.ஆனால்,திணைக்களத்தின் தேவையான நிகழ்ச்சிகள் மற்றும் தேசிய நிகழ்ச்சி தொடர்பான வேலை,சமூக பிரச்சனை மற்றும் சுற்றுலா பயணிகள் வருகை காரணமாக ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியாமையால் தாமதம் ஏற்படுகின்றது. |
| (ஆ)ஒவ்வொரு கடற்கரையிலும் தாவரங்கள் வளருவதை அடையாளம் காண்பதன் மூலம் இந்த கடற்கரைக்கான பயிரிடல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது மற்றும் 2016 இல் இருந்து 2018 வரை இதற்காக ரூபா 5,588,897 செலவு ஏற்பட்டது.திட்டமிடப்படாத ஆரம்பம் மற்றும் திணைக்களத்தில் சரியான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை திட்டத்தினை அமுல்படுத்திய காலப்பகுதியின் போது மேற்கொள்ளப்படாததால் திட்டம் தோல்வியடைந்தது. | திட்டமானது முறையான திட்டமிடலுடன் ஆரம்பிக்கப்பட வேண்டும் மற்றும் திட்டத்தை அமுல் படுத்தும் பொழுதும் மற்றும் அதன் பின்னரும் முறையாக கண்காணிக்கப்பட வேண்டும்.மற்றும் உத்தேசிக்கப்பட்ட முடிவுகளை திட்டம் அடைந்ததா என கட்டாயம் கண்காணிக்க வேண்டும். | அந்தந்த கடலோர பகுதிகளில் வளரும் தாவரங்களை அடையாளம் காணவும்,அந்த பகுதிகளுக்கு ஏற்ற தாவரங்களை பயிரிடவும் பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் உதவி மற்றும் மேற்பார்வையின் கீழ் இந்த துறையின் பிராந்திய அலுவலகங்களின் தலையீட்டால் 2016 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கடலோர மண்டல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.இருப்பினும், கடலோர |

| | | |
|---|---|---|
| | | தாவரங்கள் அந்த நேரத்தில் சில காலநிலை மற்றும் வானிலை தாக்கத்தால் பாதிக்கப்பட்டன.ஆகையால் , திணைக்களம் முறையான திட்டத்துடன் தொடர்புடைய திட்டத்தினை அமுல்படுத்திய போதிலும்,எதிர்பார்த்த மட்டத்தினை அடையமுடியவில்லை. |
| (இ) கடலோர பாதுகாப்பு கட்டுமானத்தின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்தின் போது,ஏராளமான பொறியியல் தரவுகள் மற்றும் சுற்றுசூழலின் புவியியல் முரண்பாடுகள் ஆகியவை கவனத்தில் கொள்ளப்படும் என்றும் கட்டுமானத்தில் தேவையான கவனம் செலுத்தப்படும் என்றும் திணைக்களம் கூறியது.இருப்பினும்,சாத்திய க்கூறு ஆய்வு இல்லாததால்,ஒரு இடத்தில் கடலோர கட்டுமானம் மேற்கொள்ளப்படும் போது மற்றொரு இடத்தில் அரிப்பு ஏற்படும்.அரிப்பு ஏற்படும் இடங்களுக்கு இடுப்பு,அலை தாங்கி மற்றும் பெரிய | கடலோர பாதுகாப்பு கட்டுமானத்தினை மேற் கொள்வதற்கு முன் கட்டுமானத்தின் சுற்றுசூழல் குறித்து மதிப்பீட்டை பெற சாத்திய ஆய்வு நடத்தப்பட வேண்டும்.பின்னர் பாதிப்பை குறைக்ககூடிய கட்டுமானத்தை திட்டமிட முடியும். | கடலோர பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பொறியியல் கட்டுமானத்திற்கு தனி சுற்றுசூழல் ஆய்வை நடத்துவதற்கு சட்டம் மற்றும் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திட்டம் விலக்களித்துள்ளது. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம் தவிர்ந்த மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கு பொருத்தமான நிறுவனத்தை கண்டுபிடிப்பது கடினமாகும். |

| | | |
|---|---|---|
| பாறை கட்டப்பட்டாலும்,அவை கரையோர அரிப்பை தடுக்க சரியான நடவடிக்கையாக காணப்படவில்லை. | | |
| (ஈ) 2017 முதல் களுத்துறை கலிடோ அருகே மணல் வெட்டப்படுவதால் ஏற்பட்ட கரையோர அரிப்புக்கு ஒரு தீர்வாக பாறைகள் மற்றும் இடுப்புகளை போடும் செயலுக்கு ரூபா 65,570,338 செலவிடப்பட்டது.ஆனால் இந்த நடவடிக்கைகளின் தாக்கம் குறித்து சுற்றுச்சூலை் ஆய்வு செய்யப்படவில்லை.எனவே எதிர்பார்த்த இலக்கை அடைய தவறியதால்,விரைவாக மாறிவரும் சுற்றுசூழல் நிலைமைகளை எதிர் கொள்ள முடியவில்லை.மேலும்,கடற்கரைகளில் கடல் அகழ்வு திட்டத்தில் 08 இலட்சம் கன மீட்டர் மணலில் 4,406,100 யூரோ மதிப்புள்ள கலிடோ மற்றும் மவுண்டலவினியா வில் கடற்கரையை நிர்மானிப்பதற்கு செயற்படுத்தப்பட்டது.மணல் அகழ்வின் மூலம் தொடர்ச்சியான கரையோர | கட்டுமானம் அல்லது மேம்பாட்டு பணிகளுக்கு முன்னர்,சுற்றுசூழல் திட்டத்தின் தாக்கத்தை தீர்மானிக்க சுற்றுச்சூழல் ஆய்வு மேற் கொள்ளப்பட வேண்டும் மற்றும் எதிர்பார்த்த இலக்கை அடைவதற்கு திட்டமிட வேண்டும். | கடுமையான வெள்ளம் மற்றும் பாதகமான வானிலை காரணமாக உடனடி சந்தர்ப்பத்தினால் களுத்துறை கலிடோ அருகே கடல் அரிப்பு ஏற்பட்டது மற்றும் தேவையான தீர்வு நடவடிக்கைகளை திணைக்களம் எடுத்துள்ளது. |

| | | |
|---|---|---|
| அரிப்பினால் எதிர்பார்த்த இலக்கை அடையவில்லை மற்றும் தற்போது ரூபா 356,526,076 செலுத்தப்பட்டு மிகுதி செலுத்தப்பட வேண்டும். | | |
| (உ) கல் சுவரை கட்டும் பொழுது கீழ் பகுதிக்கு கலவை கல்லும் 1 ½ மற்றும் 2 ½ எடையுடைய கற்பாறைகளை கடல் மட்டத்தின் மேல் உள்ள பகுதிக்கு பயன்படுத்த வேண்டும்.ஆனால் உஸ்வெட்டியாக்கியாவ மற்றும் துங்கல்பிட்டியவிற்கு முறையே ரூபா 2,394,351 மற்றும் ரூபா 7,642,016 செலவிடப்பட்டது.மேல் பகுதிக்கு கலப்பு கல் பயன்படுத்தப்பட்டமை காரணமாக கலப்பு கல் கடலிற்குள் அடித்து செல்லப்பட்டது.இதனால் அதிக பட்ச தரமான வளங்களை பயன்படுத்தாததால் எதிர்பார்த்த வெளியீட்டை அடைய முடியவில்லை. | எந்த ஒரு கட்டுமானமும் சரியான தரத்தில் செய்யப்பட வேண்டும். | உஸ்வெட்டியாக்கியாவ மற்றும் துங்கல்பிட்டிய வேலைத்தளங்கள் திடிரென ஏற்பட்ட கடல் அரிப்புக்கு புனரமைக்கப்பட்டது.இந்த திடீர் கடல் அரிப்பில் கலப்பு கற்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டன மற்றும் காலப்போக்கில் கடல் அரிப்பு தணிந்து தளங்கள் மீட்கப்பட்டன.இருப்பினம் இந்த அவசர கட்டுமானங்கள் இடிக்கப்படமாட்டாது. |

## 3.3 பெறுகைகள்

---------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| (அ) ஏலதாரரை தெரிவு செய்வதற்கு ஏல ஆவணங்களை தயாரிக்கும் போது,இறக்குமதி விலைக்கு கூடுதலாக ஏற்படும் அனைத்து செலவுகளும் துல்லியமாக அடையாளம் காணப்பட வேண்டும்.மேலும்,செலவுகள் விநியோகத்தரிற்கு செலுத்தப்பட்டால்,ஏல ஆவணத்தில் செலவு விபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.எனினும்,பின்வரும் செலவுகள், 40,000 சதுர மீட்டர் நிலப்பரப்பு தொடர்பாக ஏல ஆவணத்தில் இல்லை. | விநியோகத்தரை தெரிவு செய்வதற்குரிய அனைத்து செலவுகளும் ஏல ஆவணத்தில் உள்ளடக்கப்படும். | விநியோகஸ்தரை தெரிவு செய்ய வேண்டும் மற்றும் பொருட்களை வழங்க வேண்டும் தொடர்புடைய நிறுவனத்தின் உண்மையான பற்றுசீட்டின் அடிப்படையில் கொடுப்பனவு மேற் கொள்ளப்பட வேண்டும் மற்றும் சுங்க வரி,துறைமுக வரி மற்றும் ஆய்வு கட்டணத்தை மீள பெறுவதற்கான நடைமுறையை உள்ளடக்க வேண்டும் என ஏல பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.எந்த விநியோகத்தராலும் கட்டணங்கள் விதிக்கப்பட்ட போதிலும்,நிறுவன வீத கணக்கீடு விதிக்கப்படவில்லை. |

செலவுவிபரம்
பெறுமதி
------------------------ ----

ரூபா
ஆசா சிப்பிங் லைன்
கட்டணம்
66,714

இலங்கை துறைமுக
அதிகார சபை
60,106

கொழும்பு சர்வதேச
கொள்கலன் டெர்மினல்
லிமிட்டட் கட்டணம்
192,374

ராங் கொள்கலன்
டெர்மினல்
லிமிட்டட் கட்டணம்
(கொள்கலன் ஆய்வு
கட்டணம்)
24,134

ஆசா சிப்பிங் லைன்
கட்டணம்
113,085

போக்குவரத்து மற்றும்
கொள்கலன் கட்டணம்
232,500

688,913

| | | |
|---|---|---|
| (ஆ) பெறுகைகள் வழிகாட்டலின் பிரிவு 8.9.1(அ)இன் படி, ரூபா 250,000 த்திற்கு மேற்பட்ட வேலைக்கு இரண்டு தரப்பினரிடையே ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டும்.அலைதாங்கியை நிர்மானிப்பதற்கு ரூபா 450,000 செலவழித்து கிரைனேட் ஏற்றியை வாடகை அடிப்படையிலும் மற்றும் ரூபா 958,500 தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது.ஆனால் கப்புங்கொடுவ கட்டுமானத்திற்கு வாடகைக்கு இயந்திரத்தை மற்றும் வாகனத்தை எடுப்பதற்கு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவில்லை. | பெறுகைகள் வழிகாட்டலின் படி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டும். | இதற்கு முன்னர் இயந்திர விநியோகத்தருடன் எந்த உடனபடிக்கையும் ஏற்படவில்லை.மற்றும் இதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

## 3.4 இழப்பு அல்லது சேதம்

-----------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| நிதி ஒழுங்கு விதி 104 (1)(அ) இன் படி, ஏதாவது இழப்புக்கள் மற்றும் சேதங்களின் போது எந்த அளவு மற்றும் காரணங்களை அறிந்து கொள்வதற்கும் யார் பொறுப்பானவர் என்பதை | நிதி ஒழுங்கு விதிகளுடன் இணங்க வேண்டும். | பிடி-4249 வாகனம் 24.09.2019 அன்று விபத்துக்குள்ளாகியது மற்றும் விபத்து தொடர்பான பொலிஸ் அறிக்கை 31.10.2019 இல் கிடைக்கப்பெற்றது.(பொலிஸ் நிலையத்தால் வழங்கபட்ட அறிவித்தலின் படி வாகனத்தின் |

| | | |
|---|---|---|
| தீர்மானிப்பதற்கும் ஒரு விசாரணை தொடங்க வேண்டும்.ஆனால் திணைக்களம் சேதம் தொடர்பான நிதி ஒழுங்கு விதியின் படி சேதம் ஏற்பட்ட பிடி-4249 என்ற வாகனம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | ஆய்வறிக்கையை பெற வாகனமானது பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டதால் பொலிஸ் அறிக்கையை பெற தாமதம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது).ஓஜசி யுடன் கலந்துரையாடிய பின்னர் பொலிஸ் அறிக்கை வழங்கப்பட்டது.பின்னர்,சமரசிங்க மோட்டார் விபத்துக்குள்ளாகிய கண்ணாடியை திருத்துவதற்காக ஏலத்திற்கு அழைப்பு விட்டிருந்தது மற்றும் இருப்பு காலாவதியானதால் பொருத்தமான வகையையுடைய கண்ணாடியை சமரசிங்க மோட்டாரினால் பெறமுடியவில்லை. தற்போது திருத்துவதற்காக வேறு கம்பனியால் கேள்வி பத்திரத்திற்கு அழைப்பு விடப்பட்டது.மற்றும் நிதி ஒழுங்கு விதிகளின் படி வேலை செய்யப்படுகின்றது. |

## 3.5 முகாமைத்துவ திறனின்மை

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| (அ) பெப்ரவரி 2017 இல் இருந்து ஓகஸ்ட் 2019 வரை மணல் அகழ்விற்காக மினரல் சாண்ட்டிற்கு | கனிம மணல் சுரங்கத்திற்கு வழங்கப்பட்ட | பொருத்தமான வர்த்தமானி அறிவித்தலின் படி, அகழ்விற்காக |

| | | |
|---|---|---|
| உரிமம் வழங்கப்பட்டது மற்றும் மூன்று உரிமங்களின் நிபந்தனைகளை மீறி கம்பனி மேலதிகமாக 19,096 சதுர அளவு மணலை அகழ்ந்து எடுத்தது.ஆகையால், மினரல் சாண்ட் கம்பனியிடமிருந்து மேலதிக மணல் அகழ்விற்காக துணைகட்டணம் திணைக்களத்தால் அறவிடப்பட வேண்டும்.ஆனால், மினரல் சாண்ட்டிடமிருந்து ரூபா 9,548,057 மேலதிக தொகையை மீள பெற நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உரிமத்தின் நிபந்தனைகளை மீறி மேலதிகமாக அகழ்ந்தெடுக்கப் பட்ட அளவு தொடர்பான தொகையை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டது.எனினும்,மணலுக்கு கட்டணம் அறவிடாமலும் வெளியிடும் அளவில் மாற்றம் ஏற்பட்டால் செலுத்துவதற்கும் ஒப்பு கொள்ளப்பட்டது.ஏனெனில் தூய கனிம மணலை பெற்ற பின்பு மீதமுள்ளவை கரையோத்தில் விடப்படும். |

| உரிம இலக்கம் | அதிகமாக அகழ்ந்தெடுக்கப்பட்ட மணலின் அளவு | சதுரத்திற்கு அறவிடப்பட்ட தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| பி/17/78 | 9321.80 | 4,660,900 |
| பி/18/86 | 3928.67 | 1,964,338 |
| பி/18/946 | 5,846 | 2,922,819 |

| | | |
|---|---|---|
| (ஆ) மேலே உள்ள உரிமத்தின் 06 வது நிபந்தனையின் படி கனிம மணலை அகழ்ந்து எடுத்ததன் பின்னர் கடற்கரையை கடல் மணலுடன் புனரமைப்பது லங்கா மினரல்ஸ் இன் பொறுப்பாகும்.மற்றும் இது கம்பனி மற்றும் இனஜினியரிங் திணைக்ககளத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் செய்யப்பட வேண்டும்.ஆனால் கம்பனி அனுப்பிய தகவல்களின் படி, 277,944 மெற்றிக் தொன் கடல் மண் நிரப்பப்பட வேண்டும்.ஆனால்,119,323 மெற்றிக் தொன் நிரப்பப்பட்டுள்ளது.மற்றும் 158,621 மெற்றிக் தொன் இன்னும் நிரப்பப்பட வேண்டும். | உரிமத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்கனைகளின் படி மணல் அகழ்வை நடத்திய பின்னர் பொருத்தமான இடங்களுக்கு மணல் நிரப்பப்படுவது குறித்து திணைக்களம் பின் தொடர வேண்டும் மற்றும் அது குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு தெரிவிக்க வேண்டும். | தற்போது கடலில் விடுவிக்கப்பட்ட மணலிற்கும் அகழ்ந்து எடுக்கப்பட்ட மண்ணிற்கும் இடையில் முரண்பாடு இருப்பதாக கணக்காய்வு அறிக்கை வெளிப்படுத்தியதால் பொருத்தமான வர்த்தமானி அறிவித்தலின் படி பணம் செலுத்த வேண்டும் என்று லங்கா மினரல் சாண்டில் அறிவித்தது. |